உ

குருபாதம்

தருமபுர ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

வழங்கியருளிய

# திறப்புரையும் வாழ்த்துரையும்

குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம்

ஏழாவது ஆண்டு விழா

உ

குருபாதம்

தருமபுர ஆதீனம் 25-ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

## குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

*ஏழாவது ஆண்டு நிறைவு விழாவில்*

*வழங்கியருளிய*

# திறப்புரையும் வாழ்த்துரையும்

**1—1—55**

*திருச்சிற்றம்பலம்*

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவானைத் தத்துவனைக்
கன்னடைந்த மதிற்பிரம புரத்துறையும் காவலனை
முன்னடைந்தான் சம்பந்தன் மொழிபத்தும் இவைவல்லார்
பொன்னடைந்தார் போகங்கள் பலஅடைந்தார் புண்ணியரே.

*திருச்சிற்றம்பலம்*

## தமிழகம்

தமிழ் என்னும் மொழிக்கு இனிமை நீர்மை என்று பொருள். தமிழகம் இனிமையையும் நீர்மையையும் காப்பாற்றி வந்தது. இப்போது அவ்விரண்டும் முன்போலப் படிப்படியாய் வளர்ந்து வரத் தொடங்கியிருக்கின்றன.

## சோழநாடு

தமிழகத்தில், சோழநாடே தனிச் சிறப்புடையது. கோயில்கள் மிகுந்திருக்கும் நாடு. நீர்வளமும், நிலச் செழிப்பும் இயற்கைத் தோற்றமும் மிக்க நாடு.

## குடந்தை

இச்சோழநாட்டில், குடந்தை ஒரு மிகச் சிறந்த நகரம். இதற்கு அளவிலாப் பெருமையைக்கொடுத்த மகா மகத்திற்கு எல்லோரும் நன்றிசெலுத்தக்கடவர். அதுவும் ஆண்டுதோறும் இருந்தால் அதன் மதிப்பு ஓரளவுதான் இருக்கும். பன்னிரண்டு ஆண்டிற்கு ஒருமுறை தோன்று வதாலே அதன்சீர், அவ்வளவு காலமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அவசியத்தை உண்டாக்குகின்றது. குடந்தை தொன்றுதொட்டே தமிழுக்கும் சைவத்திற்கும் சிறந்த நகரமாகத் திகழ்ந்து வருகின்றது.

## புலவர் வாழ் புகழ்

புகழ்பெற்ற பெரும் புலவர்கள் இங்கு வாழ்ந்து வந்தார்கள். இந்நகர்க் கல்லூரியிலிருந்த தமிழ்ப் புலவர் களும் மிகப் பெரியவர்கள். மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் வாழ்ந்திருந்த பெருமை இந்நகர்க்கு உண்டு. அவர் மாணக்கருள் ஒருவரே அன்பர் சிவசேனாதிபதி திரு. ப. தி. சோ. குமரசுவாமி செட்டியார் அவர்கள்.

## குடந்தைக் கோயில்கள்

இங்குள்ள சிவாலயங்கள் பல. அவற்றுள் பாடல் பெற்றவை மூன்று. குடந்தைக் காரோணத்து விசுவ நாதரது விசாலாட்சமும், மங்களாம்பிகையின் கடைக் கண்ணோக்கமும், குடந்தைக் கீழ்க்கோட்டத்தின் கதிர்

ஒளி வழிபாடும், கூத்தப்பிரான் திருவருளொளியும் இவ்வுலகச் செல்வங்கள். சாரங்க பாணியின் தயாநிதிக்கு எப்போதும் குறைவில்லை. கீழ்க் கோட்டம் (கோயில்) என்பது கிழக்கே உள்ளதால் ஏற்பட்ட பெயர். குடமூக்கு (மேற்குமூலை) என்பது அதற்கு ஒருசான்று. கதிரோன் ஒளி வழிபாடு குறித்து, நிலமட்டத்திற்குக் கீழே அமைந்துள்ள கோட்டம் என்று பொருள் கொண்டுரைப்பதும் பொருத்தம் ஆகும்.

## தலப்பெயர் ஆராய்ச்சி

'குடமுடுக்கு' என்று பழங்காலத்தில் வழங்கி வந்திருக்கவேண்டும். கும்பகோணம் என்றபெயர் பிற்காலத்தில் ஏற்பட்டது ஆகும் "குரவிரிசோலை சூழ்ந்த குழகன் **குடமூக்கு** இடமா, இரவிரி திங்கள் சூடியிருந்தான் அவன் எம் இறையே" என்று திருஞான சம்பந்தப் பெருமானும், "வேர்த்தாடும் காளிதன் விசைதீர்க என்று கூத்தாடியுறையும் குடமூக்கிலே" என்று திருநாவுக்கரசு நாயனாரும் அருளியிருக்கின்றனர். திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் 'குடவாயில் **குடந்தை** வெண்ணி' 'சொற்கு என்றும் தொலைவிலாதான் உறையும் **குடமூக்கு**' என்று க்ஷேத்திரக் கோவைத் திருப்பாடலில் வந்திருக்கின்றன. (திருமுறை. 2. பதி. 39. பா. 1, 9,) இங்கு உற்று நோக்கினால், குடந்தையும் குடமூக்கும் ஒன்றல்ல. வேறேயாம். க்ஷேத்திரக் கோவையுள் ஒன்றே இரண்டிடத்தில் சொல்லப்படாது என்று நன்றாகத் தெரியும். இதற்கு யார் என்னசெய்வது? பழனம் பயணமாகிப் பின்பு பிரஸ்தானபுரி ஆகிப் புராணமும் செய்யலாயிற்று. சத்தி முற்றம் முத்தமாக இல்லையோ?

## சிவனடியார் திருக்கூட்டம்.

இக்குடந்தையில் இந்நூற்றாண்டின் இடைக் காலத்தில் பழம் பெருமையைப் புதுப்பிக்கவும் பழைய வைதிக

சைவம் பரவவும் திருவலஞ்சுழி விநாயகர் திருவருளால் இச்சிவனடியார் திருக்கூட்டம் தொடங்கியது. இதனால் விக்கினேசுவரர் நிர்விக்கினமாகக் காத்தருள்வார் என்பது உறுதியாயிற்று. திருவலஞ்சுழித் திருப்பதிகம் இங்கு நினைவிற்கு வரவேண்டும். திருவலஞ்சுழிவாணனை வழி படும் அதனாலே என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே என்று கூறுவது இங்கும் எங்கும் பொருத்தமாகும்.

## சிவம்

சிவம் எல்லாமாய் அல்லதுமாய் இலங்கும் ஒரு முழு முதற்பொருள். அப்பொருள் எப்பாலார்க்கும் பொது. அப்பாலும் அடிச்சார்ந்தார்க்கும் அவர் அடியார்க்கும் பதி அதுவே அன்றி வேறு இல்லை. பேரின்பத்துக்குக் காரணன், முற்றுணர்வினன், தூயதன்மையன் என்பவை சிவசப்தத்தின் அர்த்தம். (சிவஞானபோதம் வெண்பா. 32.)

'குறைவிலா மங்கல குணத்தன் ஆதலின்
நிறைமலம் அநாதியின் நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவன் என அறிவின் மேலவர்
இறையவன் பெருமையை யாவர் கூறுவார்'

(காஞ்சிப் புராணம்)

## அன்பே சிவம்

சிவனைச் சைவர் என்னும் ஒரு சிறு கூட்டத்தார்க்கே சொந்தமாக்குவது முடியுமோ? அன்பு யாருக்காவது சொந்தமாகுமோ? சிவனை அறிந்து அடைந்து சிவமாக விரும்பி முயலும் அன்பே அன்பு. அதுவே இங்குச் சிவம் எனப்பட்டது. அந்த அன்பைவிட்டு, வேறு பொன்னாசை, மண்ணாசை முதலியவற்றைச் சிவம் என்று கருதலாகாது. கருதினால், அன்பும் சிவமும் ஒன்று என்று சொல்லும் திருமந்திரத்திற்கு மாறுபடும். மண் பெண் பொன் புத்திரர் முதலியவற்றில் உண்டாகும் ஆசையை—அன்பைச் சிவம் என்றால் நம்சமயம் உலகாயத மதத்

திற்தும் மட்டமாய்த்தான் இருக்கும். 'எல்லாம் கழன்ற இடமே சிவம்' என்பதே (சிவஞானபோதம் 12. சூ. 'மறப்பித்து' உரை) முற்றமுடிந்த நம் கடவுளுண்மை. இது வெறும் வாய் வார்த்தையால் விளங்காது; குருவின் உபதேசத்தால் தான் விளங்கும். இது தனித்திருந்து செய்யத் தக்க ஆராய்ச்சி.

## அடியார் யார்?

திருவடி என்பது சிவம், சிவனருள், சிவஞானம், சிவாநந்தம், சிவாநந்த அனுபவம் எல்லாவற்றையும் குறிக்கும். "முதல்வனது திருவடியாகிய சிவாநந்தத்தை அனுபவித்தல்" (சூ. 10. அதி. 1), முதல்வன் திருவடியாகிய சிவாநந்தாநுபூதி' (சூ 11. உரை) எனவரும் சிவஞான பாடியத்தை இங்கு உணர்தல்வேண்டும்.

## திருவடி

'யான் எனது என்று அற்ற இடமே திருவடி' என்று குமரகுருபர முனிவரும் அந்நிலையை உணர்த்தியது நினைக்கத்தக்கது. அதுவே ஞானபூஜையில் திருவடியாகக்கொள்ள நிற்பது. அது பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம் அற நிறைகின்ற பரிபூரணாநந்தமாகத் தோன்றுங்கால் திருமுகமாகும். ஆன்மாக்கள் அவ்வாநந்தத்தை அநுபவிக்கும்போது திருமுடி ஆகின்றது. இதை உண்மை நெறி விளக்கம்,

'பரை உயிரில் யான் எனது என்று அற நின்றது அடியாம்;
பார்ப்பிடம் எங்கும் சிவமாய்த் தோன்றல் அது முகமாம்;
உரை இறந்த சுகமதுவே முடியாகும் என்ற இவ்வுண்மை"

என உணர்த்துகின்றது.

## அடியார்க்கு அடியவர்

அந்தத் திருவடியை அறிந்தவரும் அடைந்தவரும் அநுபவிப்பவருமே அடியார் ஆவார். அடியவர்க்கு

அடிமை செய்பவரே அடியார்க்கு அடியாராவர். அவர்கள் பெருமையை எவராலும் சொல்லமுடியாது.

'அடியார் சிவஞானம் ஆனது பெற்றோர்'

'அடியார் அரனடி ஆநந்தம் கண்டோர்
அடியார் ஆனவர் அத்தருள் உற்றோர்
அடி ஆர்பவரே அடியவர் ஆம் ஆல்
அடியார் பொன்னம் பலத்து ஆடல்கண்டாரே'

(திருமந்திரம்)

'கருவேலை தன்னைக் கடப்பர் உலகில்
மருவாத இன்பத்துள் வைத்த—குருவின்
அடியார் அடியார் அடியார் அடியார்
அடியாரைச் சார்ந்த அவர்' (துகளறுபோதம்)

என்பதில் அடியவர்க்கு அடியவராதலிலும் ஏழு தலைமுறை உண்டு என்று காட்டிய உண்மை யாவரும் அறியத்தக்கது.

## பெரியபுராணம்

தமிழ்ச் சைவத்தின் அடியார்பெருமை உணர்த்தும் அருள் நூல் திருத்தொண்டர் புராணம். அதுவே பெரிய புராணம். அதில், நம் சேக்கிழார் சுவாமிகள் அடியார் வரலாறுகளை அம்பலவாணர் அருளுதவியையும் அவர் அருளிய அடித்துணையையும் கொண்டே, உலகெலாம் பரவிநின்று உணர்ந்த உண்மைகளை எல்லாம் நமக்கு வேண்டியவரையில் எழுதிவைத்தருளினார்கள். அவர் அருளிய திருநெறி ஒன்றே, இன்றும் சைவக் கோட்டையைக்காக்கும் பெரிய அகழியாய் விளங்குகின்றது.

## ஆண்டுவிழா

திலகவதியாரும், புனிதவதியாரும், மங்கையர்க்கரசியாரும் இந்த ஆண்டு விழாவின் பொருளாக இருப்ப

தற்கும் அப் பெரியபுராணமே ஏதுவாயிருப்பது. அப் பெருமானார் அருள்விளக்கம் நமக்குக் கிடைக்கவில்லை யானால் இப்பொழுது அவர் பெருமைகளைப் பேசவும் நினைக்கவும் முடியுமோ? திருத்தொண்டத் தொகையால் உணர்ந்த அவர் திருப்பெயர்களை மட்டும் நினைத்துவரக் கூடுமே அன்றி, அம்மூவருடைய சிவப்பற்றையும், பிறழாத உறுதியையும், ஆராத அருளார்வம் முதலிய வற்றையும் உணர வேறு வழி ஏது?

## நால்வகை அடியவர்

சேக்கிழார்பெருமான், பெரியபுராணத்தில் உணர்த் தப்பெறும் அறுபதின்மூவர் முதலிய அடியவர்களை நால் வகையினராகப் பகுத்துக்கொண்டுள்ளார்.

1 சிவபெருமானே வேண்டிவந்து ஆட்கொள்ளப் பெற்றவர்.

2 உண்மையும் சிவபக்தியும் மிகுந்து உருகும் உள்ளம் உடையவர் (மெய்த்தொண்டர்).

3 கைத்திருத்தொண்டு செய்யும் கடப்பாடு உடையவர் (கைத்தொண்டர்).

4 இம் மூவகையினருள் அடங்காதவரும் வெவ் வேறு வகையில் அடிமை பூண்டவருமாகிய தொண்டர் கள்.

## தலையாய கடன்

அடியார் எல்லோரும் இந்நால்வகையராவர். யார் யார் எவ்வெவ்வகையைச் சார்ந்தவர் என்று அறிந்து கொள்வதே நம்கடமை. நாமும் அடியவராக நமக்கும் ஒருவகை இதில் இருக்கின்றதா என்று நாடி அதைக்

கடைப்பிடித்து ஒழுகிவரவேண்டும். எந்தச் சோதனைக்கும் சித்தமாக இருக்கவேண்டும். பிறவிப் பெருங் கடலைத் தாண்டிப் பேரின்ப வாழ்வுபெற விரும்பினோர்க்கு இதுவே தலையாய கடன் ஆகும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதல் வகையினர். அவரால் உலகத்தார் அறியக்கிடைத்தவை மற்றைய எல்லோருடைய திருநாமமும். அதனால், ஆண்டவனே நாம் உய்யும்பொருட்டு அடியவர் வரலாற்றுண்மைகளை நம்பி யாரூரர்வாயிலாக நாம் போற்றுவோம் போற்றிப் பயன் பெறுவோம் என்று நம்பி நல்கியருளினன்.

## கூட்டம்

நம்பிக்கைத்துரோகம் ஆர்க்குமாகாது. அத்துரோகம் நம்மை அணுகாமல் இருக்கவேண்டினால், அடியார்கூட்டம் பெருகவேண்டும். அவர் கூடுவதே கூட்டம். ஆண்டவனும் ஆன்மாக்கள் அவனை இணங்கத் தன் சீரடியார் கூட்டமும், வணங்க நமக்குத் தலையும், வாழ்த்த வாயும் வைத்து உதவினன் என்றால், அடியார் கூட்டத்தைக் காட்டிலும் அருளுறவுக்கு உரியது வேறு உண்டோ?

## அடியார் இணக்கம்

அடியவர் குலத்தையே **'பெருங்குலம்'** என்று கொண்டாடினர் முன்னோர். இக்காலத்தில் அக்கொள்கை இல்லாமையால் **'பெருங்குலம்'** என்ற வழக்கும் இல்லை. சிவபிரானைப் பெருங்குலத்தவரோடு கூடி வழிபடல் வேண்டும்.

> 'அருங்குலத்து அருந்தமிழ் ஊரன் வன்றொண்டன் சொல்
> பெருங்குலத் தவரொடு பிதற்றுதல் பெருமையே'
>
> (சுந்தரர், 739.)

என்னுந் திருமுறை வசனத்தை நோக்குதலால் அது தெரியும்.

'உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள்
[நடுவுள் நீ இருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானல் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருக்கும் அவ்வருளைப்புரி பொன்னம்
[பலத்தெம்
முடியாமுதலே என் கருத்து முடியும்வண்ணம் முன்னின்றே'

'எவரேனும் தாமாக விலாடத் திட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறம்நினைந்து அங்கு உவந்துநோக்கி
இவர் தேவர் அவர் தேவர் என்று சொல்லி
இரண்டாட்டாதொழிந்து ஈசன் திறமே பேணிக்
கவராதே தொழும் அடியார் நெஞ்சின் உள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக் காண லாமே'

எனத் திருமுறை உணர்த்திய உண்மையைக் கடைப் பிடித்து ஒழுகவேண்டும். அடியார் கூட்டமே சிவத்தைக் காட்டும். கன்றுப்பூர் நடுதறியில் விளங்கிய சிவத்தை அடியார் நெஞ்சிலே காணலாம்.

## அடியாரும் கடவுளே

அந்த அடியார், மற்றை அடியவரைச் சிவமாக எண்ணி விரும்பித் தொழுபவராயிருக்கவேண்டும். அடியார்க்கும் கடவுளுக்கும் பேதமில்லை என்று உணர்ந்து அச்சிவமாகத் திகழவேண்டும். தேவர் யார் அடியாரா கடவுளா என்ற ஆராய்ச்சியே கூடாது. அடியாரே கடவுள் என்று அடியாரிடத்தில் ஈசன் திறமேபேணிக் கவர்ச்சி இன்றித் தொழவேண்டும். 'எவரேனும் தாம் ஆக' என்றதால், "அங்கமெலாம் குறைந்துஅழுகு தொழு நோயராய் ஆவுரித்துத் தின்று உழலும் புலையரேனும்" ஆகுக, சங்கநிதி பதுமநிதி யிரண்டும்தந்து தரணியொடு வான் ஆளத் தரும் செல்வரேனும் ஆகுக. கங்கைவார்

சடைக் கரந்தார்க்கு அன்பராகிய அடியார் என்றால் அந்த அடிமையைக் காட்டும் திருநீறும் சிவசாதனமாகிய கண் மணிமாலையும் கண்டு, உண்மை உள்ளத்தொடும். வெறுப்பே இல்லாமல் விருப்பமே வடிவாகி அடிமைத் திறம் எண்ணித் தொழுது உய்யவேண்டும்.

## சிவசாதனம்

சைவத்திற்குத் திருநீற்றாலும் கண்மணியாலும் திருவைந்தெழுத்தாலும் வேறு எதற்கும் இல்லாத தனிச்சிறப்பு உண்டு. அம்மூன்றும் 'சிவசாதனம்'. அவை சிவமாம் சாத்தியத்தைக்கொடுக்கும் சாதனங்கள். "சாதனம் இன்றி ஒன்றைச் சாதிப்பார் உலகில் இல்லை" என்பது பொதுவான நியாயம். அவை அவ்வாறு, சிவம் ஆகிய சாத்தியத்தை நோக்கியே சாதனம் எனப்பட்டன. அப்பெயர் மிக்க பொருத்தமாகும். அடியார்களுக்கு உலகப்பற்று இல்லாத உண்மை நிலை ஆகிய அகத்தின் அழகைப் புறத்திலேதோற்றும் உயரிய அணிகலமாகவே விளங்குகின்றன. அதனால் 'சைவபூஷணம்' ஆயின.

## திருநீறு

திருமுறை, 'சுந்தரமாவது நீறு' என்றதால் அதனி னும் அழகு செய்வது வேறு உண்டோ? திருநீற்றி னொளியே நெற்றிக்குக் கோலம் (ஆனுயர் 16). 'நீறில்லா நெற்றி பாழ்' என்ற ஔவையார்க்கே ஆன்மாக்களுக்கு நீற்றால் எய்தும் சுந்தரம் (அழகு) நன்றாகத்தெரியும். அணி (செய்)வது என்றால் என்ன? 'கவினைத்தருவது நீறு' 'முனிவர் அணிவது நீறு' 'பேணி அணி பவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு' 'பூச இனியது நீறு' 'பேச இனியது நீறு' 'காண இனியது நீறு' 'கருத இனியது நீறு' 'பெருந் தவத்தோர்களுக்கு எல்லாம் ஆசை கெடுப்பது நீறு' 'பொருத்தமதாவது நீறு' என்று பாடியருளியவர் யார்? அவர் அத்திரு நீற்றைப் போற்றிச் சாற்றிய பாடல்களே அப்பதிகம்.

அவர் திருவாயில் வருவன எல்லாம் தமிழ் மறைமொழி கள் அல்லவோ? 'இராவணன் மேலது நீறு' 'எண்ணத் தகுவது நீறு' என்றால், அதைக்காட்டிலும் பாக்கிய மாவது' வேறு யாது உளது? அதுவே 'பரா (சக்தி) வண்ணம் ஆவது'. 'உடம்பு இடர்தீர்க்கும்'. 'இன்பம் தருவது'.

## புண்ணியப்பயன்

அத்திரு வெண்ணீற்றைப் பூசுவதற்கு அளவில்லாத புண்ணியம் வேண்டும். 'புண்ணியர் பூசும் வெண்ணீறு. அகத்தில் புனிதம் உண்டாக்குவது புண்ணியம். அப் புனிதத்தின் முடிவே சிவபுண்ணிய நிறைவு. அகத்தி லுள்ள அப்புனித பூரணத்தைப் புறத்தில் காட்டுவது திருவெண்ணீறு. அதை நம் சேக்கிழார்பெருமான், 'தூய நீறுபுனை தொண்டர்கள்' 'பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்' என்று அடியார்களுக்கு உரிய இலக்கணம் சொல்லும் இடத்தில் முதலில் வைத்து விளக்கு கின்றார்கள்.

## திருவெண்ணீற்றொளி

'சைவவெண் டிருநீற்று முண்டத்து ஒளித்தழைப்பு'

'........நல்லோர் மனம்போல் அவர் அணிந்த
சேமம் நிலவு திருநீற்றின் சிறந்த வெண்மைத் திருந்
தொளியால்
யாம இருளும் வெளியாக்கும் இரவே அல்ல விரைமலர்மேல்
காமர் மதுவுண் சிறைவண்டும் களங்கம் இன்றி விளங்குமால்'

'கேடிலா வாள்விடு நீற்றொளி'

என்ற அருள்மொழித்தேவர் திருவுள்ளம் யாவரும் அறியத்தக்கது.

## கண்டிகையே சிவ மகாபூஷணம்

'ஆரம், கண்டிகை' என்றதால கண் திகைக்கச் செய்யும் கண்டிகை மாலை சிவ மகாபூடணமாதல் தெளிவாயிற்று. ஆரம் கண்மணிமாலை. ஆடையோ

கந்தைத்துணி. மேற்கொண்ட கடமையோ சிவத் தொண்டு. குளிர்ந்த அன்பும் குறைவிலா நிறைவும் அவ் அடியவரிடத்தில்தான் இருக்கின்றன. அவர்கள் வீரமோ யாராலும் விரித்துரைக்க முடியாது.

## திருவைந்தெழுத்து

'நாவினுக்கு அருங்கலம்நமச்சிவாயவே' என்றதால் திருவைந்தெழுத்தும் சைவபூடணம் ஆகும்திருநெறி சிறக்க விளங்கும். விளங்கவே, 'உறுவது நீற்றின் செல்வம் எனக் கொளும் உள்ளம் மிக்கார்' ஆகி, ஆகம விதியினாலே பரவிய திருநீற்றையும் போற்றிக் காத்து வருதல் கடனாகும்.

## திருவைந்தெழுத்தோதும் பெருவழக்கம்

சேக்கிழார் காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் சோழநாடு பெற்று இருந்த அப்பெருமை இப்போது ஏன் இல்லை! 'வீதிகள் விழவின் ஆர்ப்பும் விரும்பினர் விருந்தின் ஆர்ப்பும்' எங்கே? நெறியில்தப்பாத சாதிகள் உண்டோ? தனயர்கள் மட்டும் மனைகளில் தப்புதல் இல்லை,

'நீதிய புள்ளும் மாவும் நிலத்திருப்பு உள்ளும் மாவும்
ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணி வரத்தான் அஞ்சும்'

என்பதால், பறவைகளும் விலங்குகளும்கூட நீதியுடையனவாய் இருந்தன; திருமகள் நிலமகளை நீங்காதிருக்கும் நினைவுடையவள். திருவைந்தெழுத்தே பிணி வாராமல் காக்கும். பாற்கடலின் பேரொளியைப்போல அடியவர் வெண்ணீற்றொளியும் அதன் பேரொலியைப்போல அவர் அஞ்செழுத்தோதும் ஒலியும் இருந்தன என்றதால், அக் காலத்தில் அச்சிவசாதனங்களின் பெருவழக்கம் புலப்படுகின்றது அன்றோ?

# அம்மந்திரத்தை மறந்ததுண்டோ ?

'தேடிய அயனும் மாலும் தெளிவுரு ஐந்தெழுத்தும்
பாடிய பொருளா யுள்ளான்'

சிவபெருமான். அவனது அருளைப் பெறவேண்டின், அத்திருவைந்தெழுத்தே அன்றி வேறு சாதனம் உண்டோ? பிறவிக் கடலைக் கடந்து உய்யும் ஆறு என்று எண்ணி, அஞ்செழுத்தின் புணை பிடித்துக் கிடக்கின்றேன் என்று மாணிக்கவாசகரே அருள்வாரானால், மற்றையோர்க்கு அம்மந்திரத்தினும் ஆண்டவனை அடையும் தந்திரம் வேறு உண்டோ? அம்மந்திரத்தை அல்லவோ, நமச்சிவாய வாழ்க! என்று **முதலில்** வாழ்த்தினார். 'நானேயோ தவம் செய்தேன் **சிவாயநம** எனப்பெற்றேன்' என்று **நடுவில்** வியந்தார். 'உய்யும்நெறி காட்டுவித்து ஓங்காரத்து உட்பொருளை ஐயன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே' என்று **முடிவில்** நாம் உய்யும்நெறியை உணர்த்தியருளினார். திருவாசகம் முழுதும் அம்மந்திரத்தின் பொருள் அல்லவோ? அதை மறந்ததுண்டோ? மாணிக்கவாசகர் மாத்திரமோ? மறந்தார் யார்? எவரேனும் அது சொல்லாதிருந்தாரோ?

'இழைத்த அன்பினில் இறை திருநீற்று மெய்யடிமை
பிழைத்தி லோமெனில் பெருந்துலை நேர்நிற்க என்று
மழைத்தடம் பொழில் திருநல்லூர் இறைவரைவணங்கித்
தழைத்த அஞ்செழுத்து ஓதினார் ஏறினார் தட்டில்.'

யார்? அமர்நீதிநாயனார். எங்கு? திருநல்லூரில். எது அவர் ஊர்? பழையாறை. தம் ஊரைவிட்டு வேற்றூர்சென்று அது செய்தது ஏன்? நல்லூர் முக்கண் மூர்த்திக்கு மிக்க சீர்வளர் திருவிழாவில் தக்க அன்பர்கள் தொக்கது கண்டதால். அருந்தும் அன்பர் பெருகிப் பொருந்துமிடத்தில், அமுதூட்டும் திருமடம் இருந்தால்

தானே விருந்தும் திருந்துமர்? வந்த செல்வத்தின் வளத்திஞல் வரும் பயன் கொள்வாராய், கந்தையும் கீளார் கோவணமும் அன்பர் கருத்தறிந்து உதவவேண்டின், அடியார் பெருகிக் கூடும் இடம் எங்கே ஆஞலும் அங்கே தான் செல்லவேண்டும். இதே காரணத்தால் தான், 'அளவில் சனம் செலவொழியா வழிக்கரையில் அருள் உடையார், உளம் அனைய தண் அளித்தாய் உறுவேனிற் பரிவு அகற்றிக், குளம்நிறைந்த நீர்த்தடம்போல் குளிர் தூங்கும் பரப்பினதாய், வளம்மருவு நிழல்தரு தண்ணீர்ப் பந்தர்' வைத்தருளிஞர் அப்பூதி யடிகள் நாயஞர். அவர்க்குத் திருவைந்தெழுத்து எது? "நாவுக்கரசு" என்பது. அதிலுள்ள மெய் கணக்கிடப்படாது. உயிர் மெய்க்கு மாத்திரை எவ்வளவு?

'அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும்
உளஎலாம் அரசின் நாமம் சாற்றும்அவ் வொழுகலாற்ருர்'.

'இப்பூதி பெற்ற நல்லோர் எல்லையில் அன்பால் என்றும்
செப்பூதி யம்கைக் கொண்டார் திருநாவுக் கரசர் பாதம்'

'இவ்வகை அரசின் நாமம் ஏத்திஎப் பொருளும்நாளும்
அவ்வருந் தவர்பொற்ருளே எனஉணர்ந் தடைவார்செல்லும்
செவ்விய நெறி'

என்பவற்ருல் அப்பூதியடிகள் ஓதிய அஞ்செழுத்து விளங்கும்.

பூழியர்கோனுக்குக் காழியர்கோன் திருநாமமே அஞ்செழுத்து அது செவியில் புகுந்த அளவிலே, அவன் அடைந்த நன்மைக்கு அளவு ஏது? 'வாயிலேவைக்கும் அளவில் மருந்தாகித் தீய பிறவிநோய் தீர்க்கும்' திருவைந்தெழுத்து 'ஞானசம்பந்தர்' என்பதே. அதுவே அவன் ஓதிய அஞ்செழுத்து ஆகும்.

'மீனவன் செவியினூடு மெய்யுணர் வளிப்போர் கூற
ஞானசம் பந்தர் என்னும் நாமமந் திரமும் செல்ல
ஆனபோ தயர்வு தன்னை அகன்றிட'

சேர்ந்தது. இதிலும் ஒற்றுக்களைக் கணக்கிடலாகாது.

'நாளும் நம்பியாரூரர் நாம [மந்திர]ம் நவின்ற நலத்தாலே
ஆளும் படியால் அணிமாதி சித்தியான அணைந்ததற்பின்
மூளும் காத லுடன்பெருக முதல்வர் நாமத் தஞ்செழுத்தும்
கேளும் பொருளும் உணர்வுமாம் பரிசு வாய்ப்பக் கெழுமினர்'

பெருமிழலைக் குறும்பரென்னும் அரும் பெருந்தவ யோகியார்க்கு, 'சுந்தரமூர்த்தி' என்னும் அஞ்செழுத்தே சிவ பஞ்சாட்சரத்தை ஓதும் பெரும்பேற்றை விளைத்தது. இந்த உண்மையை மறத்தல் ஆகாது. நமக்கும் அதுவே இப்பெரிய புராணத்தைக் கொடுத்தது.

## ஐந்தெழுத்தும் அடியவரும்

'எடுத்த குழற்கருவியினில் எம்பிரான் எழுத்தஞ்சும்
தொடுத்த முறை ஏழிசையின் சுருதிபெற வாசித்துத்
தடுத்த சரா சரங்கள் எலாம் தங்கவரும் தங்கருணை
அடுத்த இசை யமுதளித்து'

எவ்வுயிரும் என்பெலாம் கரைந்து உருகச் செய்தருளினர் ஆனாய நாயனார். இசை விரும்பும் கூத்தனார் எதிர் எழுந்தருளிய சிறப்பு அஞ்செழுத்தாலோ? குழலொலி யாலோ? வெறும் புல்லாங்குழல் ஒலிக்கும் கடலொலிக் கும் கேட்பதில் வேறுபாடு உண்டு. ஆனாயர் குழல் ஒலிக்கு ஆண்டவனருள் பயன்.

முருக நாயனார், 'ஓங்கிச் சிறந்த அஞ்செழுத்தும் ஓவாநாவின் உணர்வினர்' என்னும் உயரிய நிலையுடைய வர். அஞ்செழுத்தும் ஓவாத நாவே சிவஞான சாதனம் ஆதல் இதனால் விளங்கும். 'நற்றவா உனை நான் மறக் கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' என்னுமாறு, நாம் மறந்தபோதும் நாவானது தானே சொல்லும் அளவு, அதற்குப் பயிற்சி கொடுக்கவேண்டும். முருக நாயனார் அப்படி 'வழுவாமே பயின்றே பணிந்து பரவினர்'.

காமாட்சியம்பிகையும் திருவைந்தெழுத்தை ஓதியே ஒருமாவிற் பெருமானைத் தழுவும் பேறு வாய்த்தாள் என்றால், நம்மனோர்க்கு இதை விட்டால் கதி கிடைக்குமோ?

'நெஞ்சம் ஈசனைக் காண்பதே விரும்பி
நிரந்தரம் திரு வாக்கினில் நிகழ்வது
அஞ்செழுத்துமே ஆக ஆளுடைய
அம்மை செம்மலர்க் கைகுவித் தருளித்
தஞ்சம் ஆகிய அருந்தவம் புரியத்
தரிப்பதே அவள் தனிப்பெருங் கணவர்
வஞ்சம் நீக்கிய மாவின் மூலத்தில்
வந்து தோன்றினர் மலைமகள் காண'

சண்டேசுர நாயனர் 'அலகில் கலையின் பொருட்குஎல்லை ஆடும் கழலே எனக் கொண்ட சிந்தையினில்' — 'உள்ள நிறை கலைத்துறைகள் ஒழிவின்றிப் பயின்றவற்றல் தெள்ளி வடித்து அறிந்த பொருள் சிவன் கழலில் செறிவு என்றே கொள்ளும் உணர்வினில் நிலைத்திருந்தது கருத்தின் பயனும் எழுத்தஞ்சும் அன்ருே?

'தொலைவில் செய்தவத் தொண்டனர் ஆகிய திரு நீலநக்கர், சுருதியே முதலாம் கலையின் உண்மையாம் எழுத்தஞ்சும் கணிக்கின்ற' வாய்மையை அறியாதார் யார்?

அமரர் வாழ்த்துதற்கு அரிய அஞ்செழுத்தையும் நம் மொழி அரசர் போற்றினர். கருநெடுங்கடலில் கல்லும் மிதந்தது. அதில் என்ன வியப்பு! இருள்சேர் இருவினைக் கயிற்றல் ஆணவம் மாயை கன்மம் எனப் படும் கல்லொடு கட்டிப் பிறவிப் பெருங்கடலில் வீழ்த்தப் பெற்று, துன்ப அலைகளால் மோதுண்டு, கனிவாய் வனிதைக் காற்ருல் அலைவுற்று, காமச்சுருவின் வாய்ப் பட்டுக் கலங்கி, உய்யும் வழி தெரியாமல் வருந்தும் மாக்களுக்கும் பேரின்பக் கரையேறும் பெரும் பேறு கொடுக்கவல்லது பஞ்சாட்சரமே. அதுவே நமச்சிவாயம். அத்தகைய மந்திரம் நம் திருநாவுக்கரசரை உப்புக் கடலில் ஒரு கல்லாகிய தெப்பத்தில் மிதக்கச் செய்தது என்ருல் அதில் வியப்பு உண்டோ? திருவைந்தெழுத்தின் ஆற்றலில் எத்தனையில் ஒரு கூறு அது? பந்தபாசம் (கல்லோடுபிணித்துக்கட்டிய கயிறு) நைந்து நீங்கியதும்

அக்கல்லின் மேல் அப்பர் சுவாமிகள் வீற்றிருந்த அழகும் சேக்கிழார் சுவாமிகள் திருவிழிகளே காண வல்லன.

‘அப்பெருங் கல்லும் அங்கு அரசும் மேல்கொளத்
தெப்பமாய் மிதத்தலின் செறிந்த பாசமும்
தப்பியது அதன்மிசை இருந்த தாவில்சீர்
மெய்ப்பெருந் தொண்டனுர் விளங்கித் தோன்றினுர்’

‘இருவினைப் பாசமும் மும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளும்மெய் அஞ்செழுத்து அரசை அக்கட(லி)ல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ?’

இங்கு ‘மெய்ப்பெருந் தொண்டனுர்’ என்றதன் நயம் அறியத்தக்கது. பொய்ப் பெருங் குண்டர் செயல் அப்பரை அடையவல்லது அன்று இருவினை வேறு. மும்மலத்துள் ஒன்றுன கன்மம் வேறு.

‘ஓரா ணவமுதல் இருவல் வினைமல
 மூன்றும் உடல்முத லியநான்கும்
ஆரா உடலிடை ஆறுசாக் கிரமுதல்
 ஐந்தும் மநுமுதல் வழிஆறும்
சாரா வகைஎழு ஞானம் பெறஅருள்
 தகஎண் ணுநர்பணி ஒன்பானும்
தேரா அருள்பணி பத்தும் திகழ்தரு
 திகழ்அம் பலம் நடம் நவில்கின்ருன்.’

என்னும் (பேரூர்ப்புராணம். நிருத்தப்படலம். 64) கச்சியப்ப முனிவர் திருவாக்காலும் அவ்வுண்மையைத் தெளியலாம்.

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் எத்தொழிலைச் செய்தாலும் திருவைந்தெழுத்தை மறவாமல் ஓதிநின்ற உண்மையை அறியாதார் யார்? முத்துச்சிவிகையில் ஏறும் முன்பு அது திருவருளால் வந்ததும் அத் திருவருளின் உருவமும் ஆதலின், அதை வலம்வந்து வணங்கிப்

போற்றி ஏறினார்கள். அப்போது ஓதியது திருவைந் தெழுத்தே. அதை ஓதி ஏறியது எல்லாவுலகங்களும் உய்தற்பொருட்டே. இதைச் சேக்கிழார் சுவாமிகள்.

'சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்து வெண்ணீற்றொளி போற்றிநின்று
ஆதியார் அருள் ஆதலில் அஞ்செழுத்து
ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்'

என்று அருளினார்.

திருமறைக்காட்டிலிருந்து மதுரைக்குச் செல்லுங் காலத்தில், அஞ்செழுத்தும் ஓதி வெண்ணீற்றொளி விளங்கும் திருமேனி தொழுதார்கள்.

தண்டியடிகள் நாயனாரும், அமர்நீதி நாயனாரைப் போலவே,

'ஏய்ந்த அடிமை சிவனுக்கு யான்
என்னில், அன்று என் கண்பெற்று,
வேந்தன் எதிரே திருவாரூர்
விரவும் சமணர் கண் இழப்பார்
ஆய்ந்த பொருளும் சிவபதமே
ஆவது என்றே அஞ்செழுத்தை
வாய்ந்த தொண்டர் எடுத்தோதி
மணிநீர் வாவி மூழ்கினார்'

என்றதால், பஞ்சாட்சரத்தால் உண்டாகும் பல பயன்களுள் சில இங்கு விளங்கும். இப்பெருமான் நீரில் முழுகும்போது ஓதினார். நெருப்பில் முழுகும்போதும் ஓதிய பெரியவரும் பலர் உளர். அவருள் ஒருவர் புகழ்ச் சோழர். அவர்,

அண்டர்பிரான் திருநாமத் தஞ்செழுத்தும் எடுத்தோதி
மண்டுதழற் பிழம்பினிடை மகிழ்ந்தருளி உள்புக்கார்'.

சேரமான் பெருமாள் நாயனார், ஆலாலசுந்தரர் ஊர்ந்து சென்றருளும் வெள்ளையானைக்கு முன்சென்று, அதனைத் தரிசித்துச் செல்லும் பேரார்வம் பிடர்பிடித்து உந்த,

வாயுவேகமும் மனோவேகமும் பின்னிட, தம் மனத் தொடு குதிரையை ஒருங்குசெலுத்தும்போது, இச் சிவ மந்திரமோதியே செலுத்திய உண்மையை வெள்ளிமலைப் பெருமானும், ஆலாலசுந்தரரும், சேக்கிழாரும் தாம் அறிவர். திலகவதியம்மையார் திருநாவுக்கரசர்க்குத் திருவாளன் திருநீற்றைக் கொடுத்தபோது அஞ்செழுத்தை ஓதியே கொடுத்தார்கள். இவற்றையெல்லாம் நோக்கினால், அடியார் ஆவார் எல்லாரும் திருவைந்தெழுத்தை மறவாத உண்மை தெளிவாகும்.

## குன்றா நலம்

'தொன்மைத் திருநீற்றின் தொண்டின் வழிபாட்டின்
நன்மைக்கண் நின்ற நலம் என்றும் குன்றாதார்'

எவரோ? அவரே அடியாராவார்.

'வெண்ணீறு நெற்றி விரவப் புறம்பூசி
உள் நெஞ்சில் வஞ்சக் கறுப்பும் உடன்கொண்டு'

திரிபவர்க்கும் அடிமைத் திறத்திற்கும் ஒரு தொடர்பும் இல்லை.

## விபூதிப்பை

'தம்பெருமான் சாத்தும் திருநீற்றுச் சார்புடைய எம்பெருமக்களுக்கு இணையாவார் ஒருவரும் இலர். அடியார்கள், எப்போதும் 'பவம் மாற்றுந் திருநீற்றுப் பொக்கணம்' உடையவர்களாயிருப்பார்கள்.

## திருநீறு பூசிய சிவப்பொலிவு

'பொடியணிந்து தழலென்னத் திருமேனி தனிற்பொலிந்த
படிநீடு திருநீற்றின் பரப்பணிந்த பான்மையர்'

'மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியர்'

'பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறு'

என்று கூறும் பரமசிவனது திருநீற்றுப் பொலிவினுக்கு ஏற்றவாறு, அவனடியவர்களும் திருவெண்ணீற்று வண்டலாடிய திருமேனிப்பொலிவுற்றிருத்தல்வேண்டும். 'தூய சுடர்த் திருநீறு விரும்பும் தொழும்பு' தான் தொழும்பு. 'நீற்றினை நிறையப் பூசு'தல் வேண்டும். தூய வெண்ணீற்றில் துதைவதே அடிமைக்கு அழகு.

## திருநீற்று நெறி

மேருவில்லான் அடிமைத் திறம் திருநீற்றின் சார்பையே முதலாக உடையது. (மூர்த்தி 13) வாய்மை வேத நன்மைத் திருநீற்று உயர் நன்னெறியே சிவநெறி ஆதலின், திருநீறின்றிச் சிவம் இல்லை. மூர்த்திநாயனாரது திருநீற்று நெறித்துறை நீடுவாழ உலகெங்கும் நிரம்பிய சைவம் உயர்ந்துமன்னலாயிற்று! அவர்க்கு முடிசூட்டு விழாவில், பட்டாபிடேகம் திருநீற்றில் முழுகுதலே அன்றி வேறு யாதும் இல்லை. திருநீற்று முழுக்கே அபிடேகம். சிவபூடணத்தின் விளக்கமுடைய கண்டிகையே, அரசர்க்கே உரியவான அருங்கலன்கள். சடைமுடியே மன்னர்முடி. அவை எல்லாம் தம் நலத்தை மட்டும் குறித்தோ கொள்ளப் பெற்றன? அல்ல. அல்ல. அப்படி ஒருகாலும் ஆகா. வையமெலாம் வாழ்வதற்கே கொண்டவை. எல்லாரும் பிறவித் துன்பம் நீங்கிப் பேரின்பம் பெற ஏற்றவை. அவ்வுண்மையைச் சேக்கிழார் திருவாக்கால் அறியலாம். மூர்த்திநாயனாரை அரசு ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொண்டபோது,

'வையம் முறை செய்குவன் ஆகில் வயங்கும் நீறே
செய்யும் அபிடேகமும் ஆகச் செழுங்கலன்கள்
ஐயன் அடையாளமும் ஆக அணிந்து தாங்கும்
மொய்புன் சடைமா முடியே முடியாவது என்றார்.'

அவர் அவற்றை வேண்டியதன் பெரும் பயனே,

'நிலவும் திருநீற்று நெறித்துறை நீடுவாழ
உலகெங்கும் நிரம்பிய சைவம் உயர்ந்து மன்ன'

'நுதலின்கண் விழித்தவர் வாய்மை நுணங்கு நூலின்
பதம் எங்கும் நிறைந்து விளங்கப் பவங்கள் மாற
உதவுந் திருநீறு உயர் கண்டிகை கொண்ட வேணி
முதல் முமமையினுல் உலகு ஆண்டனர் மூர்த்தியார்தாம்'

என்றுள்ள பெரியபுராணச் செய்யுளால் தெள்ளிதின் உணரலாம்.

## ஒருமைக்கு உரியது திருநீறே

'ஒன்ருகக் காண்பதே காட்சி' ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனம் இல்லை' 'ஒருமையால் உலகை வெல்வார்'......'இருமையும் கடந்து நின்ருர்' என்று குறிக்கப்பெற்ற ஒருமை திருநீற்ருல்தான் எய்தும். அது உண்மை. அதைச் சேக்கிழார்சுவாமிகள் 'செம்மை வெண்ணீற்று ஒருமையினுர்' என்று சண்டேசுரநாயனுர் புராணத்தில், சிவவேதியர் சிறப்புணர்த்தும் இடத்தில் முதலில் எடுத்துரைத்தருளினுர். இதனுல் ஒருமையுணர்வுக்குத் திருநீறே சிறந்த சாதனம் என்று தெளிவாயிற்று. ஆகவே, அடியார்களுக்குத் திருநீறு நிறையப்பூசுதல் சிறந்த - தலையாய - சிவலட்சணமாகும். அது பூசாதது அவ லட்சணமே அன்றித் தவ லட்சணம் ஆமோ?

## வேந்தர் ஒருமை

சேரமான்பெருமாள் நாயனுர் மூவேந்தருள் ஒருவர். அவர் அச்சேரர்குலமும் உலகும் செய்த பெருந்தவத்தாலும் அத்தவத்தின் பயனுகிய திருவருளாலும் அவதரித்தவர். மண்மேல் சைவநெறி வாழ வளர்ந்தவர். கண்ணுதலான் கழலே பேணும் கருத்தினர். உலகின் இயல்பும் அரசியல்பும் உறுதி அல்ல என்று உணர்ந்தவர். புலரி எழுந்து புனலிலும் மூழ்கிப் புனிதவெண்ணீற்றிலும் மூழ்கினவர். ஒருமைநெறியின் உணர்வு வரத் திருப்பாட்டு ஓதிப் பணிந்தவர். இன்பம் பெருகுந் திருத்தொண்டுக்கு இடையூறு என அரசை எள்ளியவர். யாரும் யாவும் கழறினவும் அறியும் உணர்வை வரம் வேண்டிப் பெற்றவர். அவர்க்கு உவரின் பொதி

சுமக்கும் வண்ணான் தோற்றம் அடியவர் தோற்றமாகத் தோன்றிற்று. யானைமேல் இருந்தவர் இறங்கினார். வண்ணானிடத்தில் விரைந்துசென்று கைதொழுதார்.

## அடியேன் அடிச்சேரன்

'அடியேன் அடிவண்ணான்' என்றான். 'அடியேன் அடிச்சேரன்' என்றார் சேரர்பிரானார். அப்பெரிய நலத்தைத் 'திருநீற்றின் வார வேடம் நினைப்பித்தீர்' என்று மரியாதி குறையாமல் அறிவித்தருளி, 'வருந்தாது ஏகும்' என்றார். அவரே 'மலரும் திருநீற்றொளி வளர மறைகள் வளர மண்ணளிப்பார்' ஆனார். உலகு விளங்கும் திருப்பேரம்பலத்தை வணங்கி அளவில் இன்பப் பெருங் கூத்தாடுங் கழல் கண்டு உள்ளமும் புலமும் ஒருவழிச் சென்று உருகப் போற்றியது திரு நீற்றின் பயனே. ஒருநாள் கேளாது நின்ற சிலம்பொலி யைக் கேட்கச்செய்ததும் 'பாரோடு விசும்பாட்சி எனக் குமது பாதமலர்' என்று நாவலர்கோனை அக்காவலர் கோன் போற்றியதும் அத்திருநீற்றொருமையே ஆகும். அதுமட்டுமோ? யானைமுன் சேவித்துச்சென்று சிவ கருணைப் பெருவெள்ளத்தால் கயிலையை அடைந்து, திருவுலாக் கேட்பிக்கச்செய்ததும் அவ்வெண்ணீற்றொரு மையின் பயனே ஆம். முழுநீறு பூசிய முனிவர் மும் மலமும் அறுத்த வாய்மை சேக்கிழார்க்கே அன்றி வேறு எவர்க்கு விளங்கும்?

## மந்திரம் ஆவது நீறு

'மேதினி புனிதம் ஆக வெண்ணீற்றின் விரிந்த சோதி
மாதிரம் தூய்மை செய்யும். வல்லிருள் மாயும்'.

**ஞானசம்பந்தம் என்னும் நாம மந்திரமும்** அவர் புனித நீற்று மேதகு கோலமும் பாண்டியனது மனக் கோணலை முதலில் நிமிர்த்தின. பின்னர்; ஆலவாய் அண்ணல் நீறே மந்திரமும் மருந்துமாகி உடற்கோணலை யும் வெப்பு நோயையும் ஒழித்தன.

'திருமுகம் கருணை காட்டத் திருக்கையால் நீறு காட்டிப்
பெருமறை துதிக்கும் ஆற்றல் பிள்ளையார் போற்றிப் பின்னும்
ஒருமுறை தடவ அங்கண் ஒழிந்துவெப் பகன்று பாகம்
மருவுதீப் பிணியும் நீங்கி வழுதியும் முழுதும் உய்ந்தான்'

என்றதில், காழிவேந்தர் பூழிவேந்தனுக்குக் காட்டியவை திருமுகத்தில் கருணையும் திருக்கையில் திருநீறும் ஆம். போற்றியது அத்திருநீற்றை. அதுவும் வேதவிதிப்படி. தடவியது இரண்டாவதுமுறை. தீர்ந்தது இடப்பால் வெப்பு. முதல்முறையே வலப்பால் வெப்பு விலகிற்று. அதனால் 'முழுதும் உய்ந்தான்' என்றார் சேக்கிழார். பாண்டியனும் ஆம் ஆம் என்பதுபோல,

'மீனவன் றன்மேல் உள்ள வெப்பெலாம் உடனேமாற
ஆனபேரின்பம் எய்தி உச்சிமேல் அங்கை கூப்பி
ஞானசம்பந்தர் பாதம் நண்ணிநான் உய்ந்தேன் என்றான்'

திருமருதந்துறையில் அக்காலத்தில் கூடிய நன் மக்கள் எல்லாரும்,

'மீனவன் கொண்ட வெப்பை நீக்கிநம் விழுமம் தீர்த்த
ஞானசம் பந்தர் இந்த நாயனார் காணும் என்பார்'

'மானசீர்த் தென்னன் நாடு வாழவந் தணைந்தார் என்பார்'

'புரிசடை அண்ணல் நீறே
பொருள்எனக் கண்டோம் என்பார்' ஆயினர்.

## சிவவேடமே சுந்தரவேடம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'காதிலணி கண்டிகை வடிந்தகுழை' என்ன என்று சைவர்கள் சிந்திக்க வேண்டும். சிந்தித்தால் மடங்களில் தம்பிரான்கள் பூண்டிருக்கும் 'சுந்தரவேடம்' இன்னதென்று ஒருவாறு தெரியலாம். சைவக்கோலம் சிவபெருமானிடத்திலிருந்து வந்ததே ஒழிய, மக்களே தோற்றிக் கொண்டதன்று. அம்முழுமுதற் பொதுப்பொருள் தன்னை நமக்கு

உணர்த்தவேண்டித் தந்த அரும்பெரு ஞானச் செல்வங்களே அக்கோலமாகிய சிவபூடணங்கள்.

தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னுள் இருத்தலால்—தன்னுணரும்
நேசத்தார் தம்பால் நிகழும் ததிநெய் போல்
பாசத்தார்க்கு இன்றும் பதி'

என்னும் சிவஞானபோத வெண்பாவின் உரையில், ஆசிரியர் மாதவச் சிவஞான யோகிகள்,

உரை :- "வாக்கு மனாதீதமாய் நின்ற பரம்பொருள் **உலகத்தார்** தன்னை அறியும்படி கருணை செய்து, **தனது வேடம் ஆகிய திருநீறு கண்டிகை முதலிய தனது வடிவத்தைத் தன் அன்பர்க்குக் கொடுத்து அவர்கள் இடமாக நின்று அங்கங்கே அறிவு விளக்குதலானும்**, அவர், தம்மைச் சோகம் **பாவனை**யான் உணரச் செய்தலானும், அவரை ஒரு குறியின்கண் நிறுத்தித் தனது வியாபகத்துக்கு உள்ளாக இருத்துதலானும் (செயலானும்) குறி இறந்து நின்று தன்னை உள்ளவாறு **உணரும்** அன்பாளராகிய அவர் மாட்டுத், தயிரின் கண்ணதாகிய நெய்போல விளங்கித்தோன்றும்.

பாசக் கட்டுடையார்க்கு இவ்வியல்பு இல்லாமை அவர் மாட்டுப், பாலின் கண்ணதாகிய நெய் போல விளங்காது நிற்கும்" என்று எழுதியருளியிருப்பது யாவரும் உள்ளங்கொள்ளத் தக்கது.

இச்சிவஞானபோத வெண்பாவிற்கு உரையாகச் சிவஞான சித்தியாரில் உள்ள திருவிருத்தமும் இதனை நான்கு பிரிவாக்கிக் கூறுகின்றது. அவையாவன.

### வேடம் (சரியை)

'அறிவரியான் தனைஅறிய யாக்கை ஆக்கி
அங்கங்கே உயிர்க்குயிராய் அறிவுகொடுத்து அருளால்
செறிதலினல் திருவேடம் சிவனுருவே ஆகும்.'

### பாவனை (யோகம்)

'சிவோகம் பாவிக்கும் அத்தால் சிவனும் ஆவர்'

### செயல் (கிரியை)

'குறியதனல் இதயத்தே அரனைக் கூடும்
கொள்கையினல் அரன் ஆவர்.'

### தன்மை (ஞானம்)

'குறியொடு தாம் அழியும்
நெறியதனல் சிவமேயாய் நின்றிடுவர் என்றல்
நேசத்தார்த் தொழுதிடுநீ பாசத்தார் விடவே!'

என்பது.

### அடியவர் சார்பு

உலகின் இயல்பை நன்ருக உணர்ந்த அடியார் களுக்கு உலகில் எதுவும் சார்பாகாது. உயிர்கள் பிறப்பும் இறப்பும் அடைந்து துன்புறுதற்குக் காரணம் ஒரு சார்பேயாகும். துன்பமோ இன்பமோ ஏதேனும் ஒரு சார்பிஞல்தான் உயிர்க்கு வருகின்றன. பொருட்சார்பும் புகழ்ச்சார்பும் ஆசையை வளர்ப்பவை. இறைவன் திருவடிச் சார்பும் அதைக் காட்டும் சமயச் சார்பும் உயிர்களுக்கு அழியாத இன்பத்தைக் கொடுப்பவை புகழையோ பொருளையோ சார்ந்து அவற்றை நாடியும் தேடியும் அலையும் உயிர்களுக்கு அப்புகழ்ச் சார்பாலும் பொருட்சார்பாலும் மேலும்மேலும் அவாவே பெருகும். அவாவானது மனத்தை இடமாகக்கொண்டு பொருளை யும் புகழையும் தேடச் செய்து ஆசையைப் பெருக்கும்.

அதனால் அது மருளவா ஆகும். அஃது ஆணவமாகிய இருளிலேயே உயிரை இருக்கச் செய்யும். அதற்கு இறைவன் அருளில் அவாவைச் செலுத்துதல்வேண்டும். அருளவா வளரும் பொருட்டு ஆண்டவன் திருவடிச் சார்பே அடியவராவார்க்கு வேண்டும்.

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.'

அருளவாவைப் பெறாதவர் மருளவாவும் மனத்தால் பொருளவாவைப் பெருக்கித் துன்பத்தையே அடைவர். அத்தகைய இருள் அவாவை ஒழித்து அருளாகிய ஒளி அவாவைப் பெற்றால்தான் பிறப்பும் இறப்புமாகிய பிணி விட்டு அகலும்.

'மருளவா மனத்தனாகி மயங்கினேன் மதியிலாதேன்
இருளவா அறுக்கும் எந்தை இணையடி நீழல் என்னும்
அருளவாப் பெறுதலன்றி அஞ்சிநான் அலமந்தேற்குப்
பொருளவாத் தந்தவாறே போதுபோய்ப் புலர்ந்ததன்றே'
—அப்பர்

பொருளையும் புகழையும் சாராத உயிர்கள் திருவருளைப் பெறுதல் மிக எளிது.

அவ்வாறு இருட்சார்பு ஒழிய அருட்சார்பாகிய இறைவன் திருவடிச்சார்பே அடியாராவார்க்கு முதலில் வேண்டுவதாகும்.

'நக்கனரவர் சார்வலால் நல்குசார்விலோம் நாங்களே'

'சைவனாரவர் சார்வலால் யாதுஞ் சார்விலோம் நாங்களே'

'சாதுக்கண் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே'

'கங்கை தரித்தானைச் சாராதார் சார்வென்னே'

'சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்'

திருநீலகண்டநாயனார் சைவ மெய்த்திருவின் சார்பே பொருளெனச் சார்ந்தவர், மெய்ப்பொருள்நாயனார் தங்கள்

நாயகருக்கு அன்பர்தாள் அல்லால் சார்பு ஒன்று இல்லாதவர். நமிநந்தி அடிகளும் மூர்க்கநாயனாரும் திருநீற்றையே மெய்ப்பொருளென்று அறிந்து சார்ந்து வாழ்ந்தவர்கள். இச்சார்புகளுள் சமயச்சார்பும் திருவடிச் சார்பும் சமயச் சின்னமாகிய திருநீற்றின் சார்பும் என்று சார்பு வெவ்வேறாயினும், குறிக்கோள் ஒன்றேயாகும். அச்சார்புகளுடன் அடியார் அடித்தொண்டும் மிக முக்கியமானது. இல்லையானால் அச்சார்புகள் நிலைபெற வழியில்லை. அடியார்கள் மனத்திற்குத் திருவேடத்தையும் வாக்கிற்குத்திருஐந்தெழுத்தையும், காயத்திற்குச் சிவத்தொண்டுகளையும் சிவனடியார் திருவடித் தொண்டுகளையும் சார்பாகக்கொண்டு தங்கள் **திண்மை ஒழுக்க நடை**யைச்செலுத்தி வரவேண்டும். அதற்காகச் சிவனார் செய்ய கழல்பற்றி எப்பற்றினையும் அற எறிவாராகிய விறன்மிண்டநாயனாரின் அறம்மண்டு சேவடிகளை இடைவிடாது தியானம் செய்யவேண்டும்.

## அடியவர் பெருமையை அளப்பவர் இல்லை

'பெருமையால் தம்மை ஒப்பார்' என்றார் சேக்கிழார். அதனால் 'அடியவர்க்கு அடியவரே ஒப்பு'. நம்பர் தாம் அளக்கில் அன்றி நினைக்கில் ஆர் அளக்கவல்லார்' என்ற வினாவால் அடியார்பெருமையையும், அவர் தொண்டுகளையும், அழியாவீரத்தையும் அளப்பதற்கு ஆண்டவனே வல்லவன் என்றுவிளங்கும். இப்படி அடியவர் பெருமையைச் சிறிதும் அளவிட்டுச் சொல்லமுடியாமையை ஆங்காங்கு அறிவித்துக்கொண்டே சென்று, புராண முடிவில் இசை ஞானிப் பிராட்டியாரது இசையை இசைக்க என் புன் மொழியால் முடியுமோ என்று வினவி, முடியாது என்று விடையிறுத்து, முடிவாக எவர்க்கும் முடியாது என்று முடிவுகட்டிவிட்டார். இதனால் அடியாரது பெருமையைச்சொல்ல முடியா நிலையில் முடிக்கவேண்டியதுதானே?

## அடியார்க்குப் பகை

எறிபத்த நாயனார் மதம் பிடித்த களிற்றை வதம் பண்ணக் குறித்த இடத்தில், சேக்கிழார் சுவாமிகள் 'மன்றவரடியார்க்கு என்றும் வழிப்பகை களிறேயன்றே' என்று அருளினார். சண்டேசுவர நாயனார் அவதாரம் செய்த சேய்நல்லூரில் வாழ்ந்த வேதியர் மேன்மைகளைச் சொல்லுமிடத்து, "தம்மை ஐந்து புலனும் பின் செல்லும் தகையார்" என்றார். இவற்றால் அழித்தற்கரிய அறுபகை செற்று ஐம்புலனும் அடக்கி ஞானம் புகலுடையோரும் அகனமர்ந்த அன்பினரும் ஆகிய அடியார் உள்ளப் புண்டரிகத்துள் வீழிமிழலைப் புராணர் வீற்றிருக்கும் பெரு வாழ்வு விளங்கும்.

## அடியவர் பெருவாழ்வு

கருவூர்ச் சோழ மன்னன் களிறு சிவகாமி ஆண்டார் திருத்தொண்டிற்கு இடையூறு செய்தது. அடியார்க்கு அடாதன அடுத்தபோது அவற்றை எறிந்து, தீர்க்கும் பரசுடைய பக்தர்—எறிபக்தர் தமது கைம்மழுவால் கைம்மாவை (யானையை)க் கொன்றார். அதனோடு பக்கத்தில்வந்த பரிக்கோல் பாகர் மூவரையும், மேல் இருந்த இருவரையும் மாய்த்தார். பட்டவர்த்தனமும் பட்டது. பாகரும் பட்டனர் என்று கொற்றவன் கேட்டான். குதிரைமேல் விரைந்து வந்தான். கொலை நிகழ்ந்த அரச மாவீதியில் களிறொடும் பாகர் வீழ்ந்த இடத்தில் அடுகளிறுபோல நின்ற அன்பரைக் கண்டான். கொன்றவர் இவரே என்று உணராமல், வென்றவர் யாவர் என்றான். பக்கத்தில் சென்று நின்ற பாகர் மழுவேந்திநின்ற இச்செழு முனிவரே நம் பட்டமால் யானையைக் கொன்றார் என்றனர். இச் சிவனடியார் மழை மதயானையைப் பிழைபட்டாலன்றிக் கொல்லார். ஏதோ பிழை செய்திருக்கிறது என்று எண்ணினான் அரசன். அவன் அநபாய மன்னனது அருங்குலத்தான்

அல்லஞே? அப்பலவாணன் அன்பர் இவ்வளவுகோபம் கொள்ள என்ன பிழை நடந்ததோ என்று அஞ்சிஞன். எறிபக்தரைத் தொழுது யானைசெய்த பிழைக்கு இந்தத் தண்டனை போதுமோ அருள்வீர் என்று நின்றுன். அப்பொழுது நடந்த உண்மையை எறிபக்தர் விளக்கிக்கூறியருளிஞர். கேட்ட வேந்தன் அவர் திருவடியை வணங்கி இவ் வெபராதத்திற்கு என்னையும் கொல்ல வேண்டும். தேவரீருடைய மங்கல மழுவால் கொல்லுதல் பொருந்தாது, என் வாளாலேயே என்னைக் கொன்றருளுக என்று வேண்டிஞன். உடனே வாளை நீட்டிஞன். எறிபக்தர் இரக்கமே வடிவாஞர். அரசன் அன்பிற்கு அளவே இல்லை என்று உணர்ந்தார்: வாளை வாங்காவிட்டால் தானே மாய்த்துக்கொள்வான் என்று அஞ்சி அத்தீங்கு தீர்க்க வாங்கிஞர். வாங்கவே, தன் பிழை நீங்கவே உதவி செய்யப்பெற்றேன் என்று மகிழ்ந்தான். அதை அறிந்த எறிபக்தர் அஞ்சி, சிவநேசம் மிக்க வேந்தர்க்குத் தீங்கு நினைத்ததாக ஒரு தப்பான எண்ணத்தை உண்டாக்கிவிட்டேனே என்று வாளால் கழுத்தைத் துணித்துக் கொள்ளத் தொடங்கிஞர். அப்போது அரசன் விரைந்து சென்று வாளும் கையும் பிடித்துத்தடுத்தான். வளவனது விடாப்பிடியும் மாதவரது வருத்தமும் சிவபெருமான் திருவருளைத் தூண்டின. அசரீரிவாக்கு எழுந்தது. அனைவரும் உயிர்ப்பித்து எழுந்தனர். ஆனையும் பிழைத்து எழுந்தது. செறிகழல்வேந்தனும் எறிபத்தரும் ஒருவரையொருவர் அடிவணங்கினர். பூங்கூடையில் திருப்பள்ளித்தாமும் திருவருளால் நிறைந்தது. சிவகாமி ஆண்டார் அத்திருவருளைக் கண்டுவாழ்ந்து நின்றுர். 'என் வாழ்வு வந்து அணைந்தது' என்ற இடங்களை நோக்கிஞல், அடியவர்க்கு எது வாழ்வு என்பது இனிது விளங்கும். திருவருள் வாழ்வு—சிவாநந்த வாழ்வு. அவ்வாழ்வு அடியவரிடத்திலும் ஆண்டவன் திருவருள் விளங்குமிடத்திலுமே அடியவர்கள் அடைவார்கள். அவ்வருள் வாழ்வுக்கு நிகரான வாழ்வு எதுவும் இல்லை.

'தாகம் மறந்து சதுர் மறந்து தான் மறந்து
தேகம் மறந்து அட்டமா சித்திமறந்து—ஆகத்தின்
வந்தது அறியாதிருந்து மாருச் சிவாநந்தம்
சந்ததம் வாழ்வார்க்கு ஆர் சரி?' சிவபோகசாரம் 122

அவ்வாழ்வுக்கு ஒப்புரைக்க எப்பொருளும் இல்லை. அதனால்தான் எங்கள் குருஞானசம்பந்தர் இவ்வாறு 'யார் சரி' என்று ஒரு கேள்வி கேட்டு விட்டார்.

## சிவ பூஜை

'வேத வுள்ளுறை யாவன விரிபுனல் வேணி
நாதர் தம்மையும் அவர் அடி யாரையும் நயந்து
பாத அர்ச்சனை புரிவதும் பணிவதும் என்றே
காதலால் அவை இரண்டுமே செய்கருத் துடையார்'

என்று பெரியபுராணம் தெரிய வைத்ததால், அடியார் ஆவார்க்குச் சிவபூஜையும் அடியார் வழிபாடும் முன்பு கூறிய சிவசாதனங்களின் பயனாகக் கொள்ளத்தக்கன என்று நன்குவிளங்கும் ஆண்டவனும் தன்னைத்தான் பூசித்துக்காட்டினான். காமாட்சியம்பிகையும் ஆகமவிதி தவருமல் பூசிக்கும் வரம்பெற்றுப் பூசித்து அண்ணலார் அருள் வெள்ளத்தில் தண்ணிலா மலர்வேணி ஏகம்ப ரைத் தழுவிக்கொண்டாள்.

'எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர், தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை ஆன உரைத்தருள'

பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து—போகமார்த்த பூண்முலையினுள்,

'இங்கு நாதநீ மொழிந்த ஆகமத்தின்
இயல்பினல் உனை அருச்சனை புரியப்
பொங்குகின்றது என் ஆசை என்று இறைஞ்சிப்'

பணிந்துருகிப் போற்றிய வாய்மையைக் கருதி, சிவாகமத்தில் விதித்தவண்ணமே சிவ பூஜையைச் செய்து, உய்தி பெறவேண்டும். இதுவே சிவனடியார்க்கு முடிவான கடமையாகும். கடமையைச் செய்யாமல் உரிமையைப் பெற நாடுவது சிறிதும் தகுதியாகாது.

## திருவருள் எல்லோர்க்கும் பொது

எல்லாவுலகங்களிலும் எல்லாவுயிர்கட்கும் திருவருள் பொது. மக்களுயிர்க்குக் கேட்பது ஏன்? திருவருளைப் பெற உரிமை இல்லாத உயிர்களே இல்லை, மக்கள் இருக்கமுடியுமோ? திருவருளை அடையும் அன்பு நெறியே சைவ நெறி. சிவஞானத்தால்தான் வீடு கிடைக்கும். சிவஞானமும் திருவருளும் ஒன்றே. அத் திருவருளையே கண்ணாகக்கொண்டு சிவனைக் காண வேண்டும். அவ்வாறு காணும் நெறியே திருநெறி—சிவநெறி. பின்னெறியான அந்நெறியை அடைய முன்னெறியில் ஒழுகவேண்டும். அவை நல்ல சிவதன்ம நெறியும் நல்ல சிவயோக நெறியும். அவ்விரண்டும் ஞானத் திருநெறிக்கு முன்னெறிகள். அவை பொது **நெறிகள்**. ஞானநெறி, சிறப்புநெறி, அவை எல்லாம் சைவ**நெறி**. அச் சைவ நெறியில் சென்றுகொண்டே போனால் முடிவாக அடையும் துறையே சைவத்துறை.

'ஞாலம் உய்ய நாம் உய்ய நம்பிசைவ நன்னெறியின்
சீலம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பாடச் செழு
[மறைகள்
ஓலம் இடவும் உணர்வரியார் அடியாருடன் நாம் உளது
[என்றால்
ஆலம் அமுது செய்தபிரான் அடியார் பெருமை அறிந்தார் ஆர்?

என்பதில் சைவநெறி என்பது யாது?

'வேதநெறி தழைத்தோங்க மிகு**சைவத் துறை** விளங்க என்றதில் சைவத்துறை என்றது எதனை? சைவநெறி வைதிகத்தின் தருமநெறிகள் தழைப்பக் கோயில்கள் எங்கும் மெய்வழிபாட்டர்ச்சனைகள் விதிவழி மேல் மேல் விளங்கவேண்டும். சைவமும், சைவ நூல்களும், சிவாலயங்களும், சைவ மடங்களும் எல்லார்க்கும் பயன்படும் பொது உடைமைகளே. **நீரும் நெருப்பும் பொதுவுடைமைகள்தாம்.** அவற்றை அனுபவிக்கும் முறையில் பிசகுசெய்தால் அந்நீரும் நெருப்பும் அனுகூலமாக இருக்கமாட்டா. அவைபோலவே இவையும். ஆராய்ந்துகொள்க.

## சைவ விளக்கம்

அவ்விளக்கம் உலகிற்கு இன்றியமையாத சைவ விளக்கம். அதற்கு ஆடவரும் பெண்டிரும் அருளைத் துணையாகக் கொண்டு குன்றாத முயற்சியை நன்றாகச் செய்யவேண்டும். அவ்வாறு செய்தவர்களே திலகவதி அம்மையாரும், காரைக்கால் அம்மையாரும் மங்கையர்க் கரசியம்மையாரும் மற்றைய சைவ மங்கையர் பலரும் ஆவர். அவர்கள் பெருமை பெரிய புராணத்தில் சுருக்க மாகக் கண்டாலும் ஆழ்ந்து உணர்ந்தால் பெருக்கமாக விரிந்து தோன்றும்.

## திலகவதியம்மையார்

அம்மையார் அவதாரம் புரிந்த ஊர் திருவாமூர். (திரு + ஆமூர்) அதுவே திருவாம் ஊர். என்ன ஆம் திரு ? சிவம் ஆம் திரு. சிவம் பெருக்கும் திரு. சிவத் தைப் பெருக்கும் நெறி எத்தகையது ? தெய்வத்தன்மை உடையது. அதுவே சைவநெறி. அதுவே ஏழுலகங் களையும் பரிபாலனம் புரியும் பெரிய நெறி. அந்நெறியில் சைவத்தை வளர்த்தது அவ்வூர். ஆங்கு அவதரித்தருளிய திருநாவுக்கரசரே முதன்முதலில் தேவாரத்தைத் தென் னாட்டிற்கு வழங்கியருளினார். அவ்வருட்கொடையே இன்றும் இங்குக் கூடத் தெய்வநெறிச் சிவத்தைப் பெருக்கி நிற்கின்றது. இதை நம்சேக்கிழார் பெருமானார்.

'சைவநெறி தலைஏழும் பாலிக்கும் தகைமையினால்
தெய்வநெறிச் சிவம் பெருக்கும் திருவாமூர் திருவாமூர்'

என்று சுருங்கப்பாடி விளங்கவைத்தருளினார்.

## திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டு நெறி

திலகவதியார் புகழனார்க்கும் மாதினியார்க்கும் மருள்நீக்கியார்க்கு முன்பு அவரது மருள்நீக்க அவதரித் தார். மருள்நீக்கியார், • 'திருநாவுக்கரசு(சிவம்)வளர்

திருத்தொண்டின் நெறிவாழவந்தவர். இவ்விருவரையும் அளித்த குறுக்கையர் குடிக்கு எல்லா உலகமும் நன்றி செலுத்தவேண்டும். அது அனைத்துவித நலமும் உடைய அரும்பெரும் குடியாகும். வேளாண் குலத்தில் வந்த தாளாண்மைக்குத் திலகவதியாரே முடிவான எல்லை யானூர். சைவத்திற்குத் திருநாவுக்கரசரைத் தந்த தாளாண்மை திலகவதியார்க்கே உரியது புகழனூரும் மாதினியாரும் மருள்நீக்கியாரைப் பெற்றெடுத்த வொன் றற்கே உரியராயினர். அவரைச் சைவநெறியில் செலுத்திய புகழ் அம்மையார்க்கே உரியது.

## அனைத்து உயிர்க்கும் அருள் தாங்குதல்

கலிப்பகையார் வேந்தற்குற்றுழிவினைமேல் சென்று போர்க்களத்தில் உயிர்கொடுத்துப் புகழ்கொண்ட செய்தி யைக்கேட்டார். தம்மைப்பெற்ற மாதினியார் புகழனூர் போன உலகிற்கே சென்றவாறும், 'தாய்போலச் சேய்' என்றவாறும், இவ்வுயிரை அவருயிரோடு இசைவிப்பன் எனத் துணிந்தார். அதை அறிந்த தம்பியார், என்னைக் கைவிட்டு ஏகுவீர் எனில் யானும் உயிர்நீப்பன்' என்றூர். என்றதும் திலகவதியார், தம்பியாரிடத்தில் வைத்திருந்த தயாவிற்கும் கலிப்பகையாரிடத்தில் வைத்திருந்த கற்பினூல் வந்த துணிவிற்கும் போர் நிகழ்ந்தது. அப் போரில் தம்பியார் உளராகவேண்டும் என வைத்த தயா வானது 'உம்பர் உலகு அணைய உறும் நிலை'யை விலக்கி உயிர்தாங்கும்படி செய்து முழுவெற்றி அடைந்தது. தயாவின் ஜெயமே அம்மையார் அம் பொன்மணி நூலைத் தாங்காமல் அனைத்து உயிர்க்கும் அருள்தாங்கி, மனைத் தவம் (மனையறம் அன்று) புரிந்திருத்தலாகியகொடியை ஏற்றச் செய்தது. அவ்வெற்றிக்கொடிதான் இன்னும் சைவத்தின் அழியாப்புகழுக்கு அறிகுறியாகி வானோங்கி விளங்குகின்றது. வேற்றுச் சமயத்தில் இருந்தவரைச் சைவத்திற்கு மீட்டருளிய திலகவதி அம்மையார் தவத்திற்கு ஒப்பு உண்டோ?

## மருணீக்கியார் தொண்டு

அவர்க்கு நிலையாமை உணர்ச்சி இளமையிலேயே எய்திற்று, அறவினைகளைச் செய்யத்தொடங்கினார். அறச் சாலைகளும், தண்ணீர்ப்பந்தரும் அமைத்த கருணைநிதி ஆனார். காவளர்த்தல், குளம் வெட்டுதல், மக்கட்கு வேண்டுவன வழங்குதல், விருந்தோம்பல், நாவலர்க்குப் பெருவளம் நல்குதல், உலகவர் எல்லார்க்கும் ஒழியாமல் ஈதல் ஆகிய அறங்களைச் செய்தார். அவ்வகையால் பற்றெல்லாம் அற்றன. இயல்பாகத் துறவு செம்மை யுற்றது.

## திருவருளை வேண்டுதல்

சமய நூல்களை ஆராய்ந்தார். சிவபெருமான் திரு வருள் அக்காலத்தில் துணை செய்யாதபடியால், சமண் சார்ந்தார். தவநெறிஒழுகும் திலகவதியார், தம்பியாரைத் தூய சிவநெறியே சேர்வதற்குத் திருவருளை வேண்டினார்.

## திருப்பணி செய்தல்

அதை நிறைவேற்றத் திருவதிகை வீரட்டானத்தை வழிபடச் சென்று சேர்ந்தார். திருவலகு பணிமாறல் முதலிய திருப்பணிகளைச் செய்துவந்தார். பின்பிறந் தவர் கோளுறு தீவினை, முன் புகுத்துவதால் பரசமயம் குறித்த ஒன்றே மனக்கவலையை வளர்த்துவர முடியாத் துயரம் முற்றப் பெற்றார். திருவதிகையிலுள்ள மாநகருள் விளங்கும் சுடரொளியைத் தொழுதார். பெருமானே, என்னை ஆண்டருளினீர் ஆகில், அடியேன் பின் வந்தவனைப் பரசமயக் குழிநின்றும் சிவசமயக் கரையேற எடுத்தாளவேண்டும் என்று பலமுறையும் விண்ணப்பஞ்செய்தார். சிவநெறி நின்ற திலகவதி யார்க்குக் கனவில் வந்து, கருத்தை முடிப்பேன் என்றார் கடவுள். அதற்குக் கருவி எது? திருவருள் ஏதேனும்

ஒன்றைப்பற்றித்தான் ஆன்மாக்களுக்கு விளங்கும். அது நன்றாயினும் தீதாயினும் ஆகுக. முடிவில் எல்லாம் நன்மையாகவே முடியும்.

## சூலைக்கு வணக்கம்

தொண்டரைக் கண்டது சூலை. வேலையை வென்றது சூலையின் வேதனை. 'தவமென்று வினை பெருக்கிச் சார்பல்லா நெறி சார்வார்' ஆகிய சமணர் செய்வதறியாது திகைத்தனர். நம்மால் போக்க அரிது என்று போயினர். தமக்கை நினைவு தம்பியார்க்கு வந்தது. ஊட்டுவானை (சமையற்காரனை) ஓட்டினார். அவன் திலகவதியாரிடம்சென்று கூறினான், அச்சூலைக்கு நம் வணக்கமும் உரித்தாகுக.

## அம்மையார் உறுதி

யான் அங்கு உன்னுடன் போந்து, நன்றே அறியாத சமண்பாழியை நண்ணுகிலேன். இதைத் தம்பிக்குச் சாற்று என்றார். இந்த உறுதி எந்தச் சைவர்க்கும் உரியது. அவனும் அவ்வாறே சென்று தெரிவித்தான். அதுகேட்ட மருணீக்கியார், 'ஒழியா இத்துயர் ஒழியச் செவ்வாறு (செந்நெறி-சிவநெறி) சேர் திலகவதியார் தாள் சேர்வேன்' எனத் துணிந்து, வெண்புடைவையால் உடலை மறைத்துக் கைகொடுத்தவரை ஊன்றிக் கொண்டே திருவதிகையைச் சார்ந்தார். கைதந்தவர் யார்? அத்திருவருளுதவியைக் காண்மின்கள்.

## திலகவதியார் திருமடம்

திருமடத்தில் திலகவதியாரைத் தரிசித்தார். திருவடியில் வீழ்ந்து வணங்கினார். இப்போது அவரே குரு. "நம் குலம் செய்த நற்றவப்பயனே" என்று அழைத்து, இச்சூலைக்குக் கடைசி ஓலை உண்டோ? இனியேனும் அடியேன் உய்திபெற்றுக் கரைஏறும் வழி சொல்க என்று வேண்டினார்.

## அம்மையார் அருண்மொழி

தாளிணைமேல் விழுந்து அயரும் தம்பியாரை நோக்கினார். இது சட்சு தீட்சை. தம் பெருமான் அருள் நினைந்தார். பாவனாதீட்சை. திருவருளைக் கைதொழுதார். பரசமயக் குழியில் விழுந்து அறியாது, மூளும் அருந்துயர் ஒழிந்தீர் எழுந்திரீர் என்று மொழிந்தார். இது வாசக தீட்சை. மருணீக்கியார் மருள்நீக்கியாரே ஆனார். 'மறப்படும் என் சிந்தை மருள் நீக்கினான் காண்' என்று வாழ்ந்தார். மருள் நீங்கியும் பிணி நீங்காமையால், அதனுடன் நடுங்கி எழுந்து தமக்கையைத் தொழுதார். இது குருவடி வணக்கம்.

## திருவாளன் திருநீறு

இப்பெறல் அரும்பேறு கற்றைச் செஞ்சடைக் கடவுள் அருளேயாகும். அவனே தன் கழலடைந்தார் பற்றைப் பறக்க அடிப்பான். அவன் அருளாலே அவன் தாள் வணங்கிப் பணிசெய்க என்று பணித்தார். அப்பணி தலைமேற்கொண்டார் அப்பர். அந்நெறியே நின்ற தபோதனியாரும் நின்மலன் பேரருள் நினைந்து, திருவிரட்டம் சென்று புகுவதற்குத் திருவைந்தெழுத்தோதித் **திருவாளன் திருநீற்றைக்** கொடுத்தார். பெருவாழ்வு வந்ததெனப் பணிந்து ஏற்று **உருவார** அணிந்து, உற்ற இடத்து உய்யும் நெறி தருவாராய் முன்வந்தவர்க்குப் பின் வந்தார். இருவரும் அடியார் அகத்திருளும் புறத்திருளும் மாற வரும் திருப்பள்ளியெழுச்சி வேளையில் திருக்கோயிலை அடைந்தனர்.

## திருவருள்பெற்ற சிறப்பு

திருவதிகைப் பெருங்கோயிலைத் தொழுது வலங்கொண்டு இறைஞ்சி வீழ்ந்து வழிபட்டார். தம்பிரான் திருவருளால் தமிழ் மாலைகள் சார்த்தும் உணர்வு கிடைத்தது. உணர்ந்தார். 'கூற்றாயினவாறு' என்று தொடங்கிப் பாடினார். கூற்று ஆயினது எது? சூலை

நோய் அப்பர்க்குக் கூற்று ஆயிற்று. அதற்கு அம்மையார் அருள் கூற்ருயிற்று. அதற்கு மாத்திரமோ? மக்களது மும்மலத்திற்கும் அதுவே கூற்று. அத்திருப்பதிகம் 'குருவருள்' என்றதலைப்பில் அகத்தியர் தேவாரத்திரட்டில் அமைந்த உண்மையை அனைவரும் அறிய வேண்டும். அத்திருவருட் பதிகத்தைப் பாடி வழிபட்டால் குருவருள் கிடைப்பது உறுதி.

## மங்கையர்க்கரசியம்மையார்

வளவர் திருக் குலக்கொழுந்தாயினும் **எங்கள் தெய்வம்** என்று உலகமெல்லாம் போற்றும் தனிச் சிறப்பு வேறு எவர்க்கும் இல்லை. **மானி** என்று பெயர் பூண்டார் யாரேனும் உண்டோ? தென்னர் குலப்பழி தீர்த்த தெய்வப்பாவை. இருந் தமிழ் நாடுற்ற இடர் தீர்த்த எம்பிராட்டி, திருநீறு பரப்பிய செல்வி. அவரைப் போற்றுவார் யாவரேயாயினும், அவர் திருவடிக்கு வணக்கம். நெடுமாறனுக்குத் துணையா? வாழ்க்கைத் துணையா? சைவவழித் துணையா? சொக்கலிங்கத்தின் திருவடிக்கீழ் இருக்கும் அருள்பெற்ற பிராட்டியார் மங்கையர்க்கரசியார்.

## காரைக்காலம்மையார்

மனைவியாரைத் தெய்வத் தொழுகுலம் என்று கொண்டதும், அவர், திருப்பெயரையே காதல்செய் குழந்தைக்கு இட்டதும் உலகில் கண்டாரும் கேட்டாரும் உளரோ! அற்புத மாங்கனி அதிமதுரக்கனி வரவழைத்த அம்மையின் உண்மை வரலாற்றில்தான் கேட்டோம். இன்றும் கயிலையில் இறவாத இன்ப அன்பால் பிறவாமைபெற்று, சிவனடி மறவாமைப் பாடியாடும் அறவாழ்வு-அருள்வாழ்வு-ஆனந்தவாழ்வு நடத்துகின்ருர். அம்மூவர் திருவருளே இவ்வாண்டு விழாப்பொருளாக அமைந்தது மிக்க மகிழ்ச்சி தருவது. இவர்களையும் பெரியபுராணத்தில் கூறும் அடியார் தொண்டுகளுக்கு அருட்டுணையாயிருந்த ஏனைய மகளிர்களையும் எல்லோரும் தோத்திரம் செய்தல் வேண்டும்.

## தோத்திரமும் சாத்திரமும்

சிவபிரான் தோத்திரமாகவும் சாத்திரமாகவும் நின்றும் ஆன்மாக்களை ஆட்கொள்கின்றான்.

'சொல்லும் பொருளெலாம் ஆனார் தாமே
தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே'

பன்னிருதிருமுறைகளுள்ளே, திருத்தொண்டர் புராணமும் திருமந்திரமும் அல்லாத எல்லாம் தோத்திரங்கள். திருமந்திரம் சிவாகமம். பெரியபுராணம் அடியார் வரலாறுகளை உணர்த்தும்வகையில் ஏனைய திருமுறைகளில் உணரப்பெறும் எல்லா இலக்கணங்களுக்கும் இலக்கியமாக—எடுத்துக்காட்டாக இலங்கும் ஒரு பெருஞ் சிவானந்தசாகரம். திருமந்திரம் சரியை கிரியை, யோகம், ஞானம் ஆகிய சைவத்திறம் நான்கும் உணர்த்துவது. மெய்கண்ட நூல்கள் உண்மை ஞானத்தை மட்டும் உணர்த்துவன. அவற்றை அருளிச்செய்த நாயன்மார்களை மறவாமல் வழிபட்டுவரல்வேண்டும். அதற்கு இத்தகைய திருக்கூட்டம் ஆங்காங்குத் தோன்றித் தொண்டுசெய்தல் வேண்டும்.

## எற்றென்றிரங்குதல்

'எண்ணிலேன் திருநாமம் அஞ்செழுத்தும் என் ஏழைமை அதனாலே' என்பது முதலாகப் பற்பல கூறி, மாணிக்கவாசகரே இரங்கினார் எனில், மக்கள் இத் துணைக்காலமும் வீணாக்கியதற்கு இரங்குதல் வேண்டாவோ?

'பஞ்சின் மெல்லடிப் பாவையர் உள்ளமும்
வஞ்சமாக்கள் தம் வல்வினை யும்பரன்
அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீள்நிலா'

என்ற அருள் மொழியில் அஞ்செழுத்துணராத நெஞ்சுக்கு மகளிர் மனமும் வஞ்சகர் வல்வினையும் இணை எனச் சொல்லியதும் அன்றி அறிவில்லாமையும் உண்டெனக் காட்டப்பட்டது. அந்த அஞ்செழுத்து ஓதாத

மக்கள், இனியேனும், பிழைகணித்து எற்றென்றிரங்கி அதை ஓதும் பழக்கத்தைக் கொள்ளல் வேண்டும்.

## துறைசை மாதவச் சிவஞானயோகிகள்

அவர்கள், சிந்தனை செல்வதற்கு அரிய இடத்திலும், அப்பஞ்சாக்கர சிந்தனையை மறவாத திருவுள்ளத்தைச் செலுத்தி ஒரு வருணனை செய்தருளியுள்ளார்கள். மடாலய வாழ்வுபெற்ற மாபெருந் தவத்தோர்க்கே அதன் அரும்பெருஞ் சிறப்பு விளங்கும்.

'கொங்கவிழ் பொதும்பர்க் கொழுமுகை யுடைந்து
குளிர்மதுச் சொரிதலின் ஆழ்ந்த
பங்கயச் சேக்கை மிமிசை எகினம்
பைப்பய மேல்நிவந் தெழுவ
பொங்குவெம் பாவக் கருமுருட் டமளல்
புண்ணியுள் சிலையுடன் அமிழ்ந்தும்
எங்கள்வா கீசர் அஞ்செழுத் தருளால்
எழுந்துமேல் வயங்குதல் மானும்.'

இத்தகைமையைநோக்கினால், சிவனுக்கு அடிமைபூணும ஆர்வமுடைய ஒருவரோ ஒரு கூட்டத்தாரோ, நாவினுக்கு அருங்கலத்தையும், திருநீற்றையும், உருத்திராக்கத்தையும், திருமுறைகளையும், சிவாலயதரிசனத்தையும், சிவனடியார்க்குத் தொண்டுசெய்தலையும் இதுவரை மேற்கொள்ளாமல் இருப்பின் அதை எண்ணி எண்ணி இரங்கினால்தான் உய்தி கிடைக்கும். இவ்வகையில் எற்றென்று இரங்குதலைச் செய்தல் தவறாகாது.

## திருக்கூட்டத்தார் பணி

குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம், திருவலஞ் சுழிப் பிள்ளையாரை வணங்கித் தொடங்கியது, பாடல் பெற்ற சிவதலங்களுள் பலவற்றை விதிப்படி வழிபட்டு வருகின்றது. சில தலங்களில், 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர்' காலத்தில் இப்படித்தான் இருந்ததோ என்று உள்ளுருகிப் பரவி, ஆநந்தபரவசம் அடையும் உண்மையநுபவமும் வாய்க்கப்பெற்றிருக்கின்றது. இக்காலத்தில், இந்நாட்டில் இக்கூட்டத்தால்

சைவத்திற்கு ஓர் ஆக்கமும் சைவமக்களுக்குப் புதிய ஊக்கமும் ஏனையோர்க்குத் தத்தம் சமயத்தில் நோக்கமும் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வுண்மையைப்பலரும் அறிவர். இதுவரையில் **திறப்புரை**யாகச் **சிவனடியார் திருக்கூட்டம்** என்பதற்கு ஒரு விளக்கம் செய்யலாயிற்று.

## வாழ்த்துரை

இத்திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் **ஏழாவது ஆண்டு நிறைவு விழாவை**, ஸ்ரீ மங்களாம்பிகையையும், ஸ்ரீ குடமூக்கீசுவரரையும் உளங்கொண்டு, போற்றித் **தொடங்குகின்றோம்.** இத் திருக்கூட்டமும் இதனைச்சார்ந்த அன்பர் எல்லோரும் இங்குக் கூடியுள்ள சிவநேசச் செல்வர் அனைவரும் ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கர் திருவருளால் நலமெலாம் நண்ணிச், சிவசாதனங்களைப் போற்றி நீடூழி வாழ்க, வாழ்க, வாழ்க.

*திருச்சிற்றம்பலம்*

சிலையது வெஞ்சிலையாகத் திரிபுர மூன் றெரி செய்த
இலைநுனைவேல் தடக்கையன் ஏந்திழையாள் ஒருகூறன்
அலைபுனல்சூழ் பிரமபுரத் தருமணியை அடிபணிந்தால்
நிலையுடைய பெருஞ்செல்வம் நீடுலகில் பெறலாமே.

—சம்பந்தர்.

ஏவியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை
இப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே
கூவி அம ருலகனைத்து முருவிப் போகக்
குறியில்அறு குணத்தாண்டு கொண்டார்போலும்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
சரசுவதி பொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தம் சூழ்ந்த
குடந்தைக் கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே.

*திருச்சிற்றம்பலம்*

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்.

---

ஞானசம்பந்தம் அச்சகம், தருமபுரம்.